# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 59/2016 | **CNR No.** | **:** | TNKI13-000551-2016 |
| **Name** | **:** | கோவிந்தன் | **Father's Name** | **:** | துரைராஜ் |
| **Witness for** | **:** | Plaintiff | **Calling** | **:** | PW2 |
| **Age** | **:** | 49 | **Village** | **:** | எட்டிப்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 04:55 PM | **End Time** | **:** | 05:10 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 13.06.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) கமலா யார் என்றால் எனது சித்தி மகள் ஆவார். சங்கீதா யார் என்றால் அவளும் சித்தி மகள் ஆவார். கமலா, சங்கீதா ஆகியோர் நிலத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளேன் என்றால் சுமார் 1 ½ கி.மீ ஆகும். சொன்னுசாமி கவுண்டர் யார் என்றால் தெரியாது. சங்கீதா மற்றும் கமலா ஆகியோர்களின் தாத்தா பெயர் என்னவென்றால் பொன்னுசாமி ஆகும். வாதிகள் சொன்னுசாமி அவர்களுடைய பேத்திகளா என்றால் இல்லை. வாதிகளுடைய அப்பா பெயர் என்னவென்றால் கமலநாதன் ஆகும். கமலநாதனுக்கு எப்போது பங்கு கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு 15 வயது இருக்கும் போது பங்கு கொடுக்கப்பட்டது. கமலநாதன் வாதிகளுக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தாரா என்றால் அவருடைய தாத்தா பொன்னுசாமி தான் எழுதிக்கொடுத்தார். எனது முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் பொன்னுசாமி எழுதிக்கொடுத்ததாக நான்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. கமலநாதனுக்கு வந்த பாக சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. செக்குபந்தி தெரியுமா என்றால் கிழக்கு பக்கம் அப்பாவு நிலம், தெற்கு ரோஜேந்திரன், சந்திரன் நிலம், வடக்கு திருப்பதி நிலம் மேற்கு பெருமாள் நிலம் உள்ளது. சங்கீதாவின் நிலம் மூன்று தாக்குகளாக உள்ளது. மேற்படி செக்குபந்தி ஒரு தாக்குக்குடைய செக்குபந்தி ஆகும். மேற்படி தாக்கின் விஸ்த்தீரணம் என்னவென்றால் தெரியாது.

(2) கமலநாதன் குடும்பத்தில் பாகம் பிரிவினை போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை, நான் அப்போது சிறுவன் ஆவேன். கமலநாதனுக்கு பாகம் பிரிவினை செய்வதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. அது பொன்னுசாமியின் கிரைய சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தான பத்திரம் எழுதும் போது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை, அதில் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. சென்னகிருஷ்ணன் மற்றும் சங்கரபாணி ஆகியோர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை இறந்துவிட்டார்கள். வேடியப்பன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். தர்மராஜா இருக்கிறாரா என்றால் இருக்கிறார். மொட்டையன் குமாரர் கிருஷ்ணன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். பொன்னுசாமி வாதிகளுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில் மென்ட் பத்திரம் பற்றியும் அதன் விவரங்கள் பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பெருமாளுக்கு பொன்னுசாமி எழுதிக்கொடுத்த நிலங்களின் சர்வே எண்கள், விஸ்த்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. பொன்னுசாமி பெருமாளுக்கு எழுதிக் கொடுத்த பத்திரங்கள் மற்றும் அதன் விவரங்கள்

தெரியுமா என்றால்  தெரியாது. கமலா மற்றும் சங்கீதா எந்த சர்வே எண் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது, செக்குபந்தி தெரியாது, 1 ¾ ஏக்கர் சொத்திற்காக தாக்கல் செய்துள்ளனர். பாதை மற்றும் கிணறு உள்ள சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது.

(3) பாதை மற்றும் கிணறு குறித்து பொன்னுசாமி  வாதிகளுக்கு எழுதிக் கொடுத்தது தெரியுமா என்றால் பத்திரம் எழுதிக்கொடுத்தது தெரியும், நேரடியாக தெரியாது. கிணற்றின் விஸ்த்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. கிணற்றிற்கு எந்த வருடம், யார் பெயரில் மின் இனைப்பு பெற்றார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து பிரச்சனைக்காவும், வழிக்காவும் தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு விவரங்கள் தெரியாமலும் பொன்னுசாமி எழுதிய பத்திரங்கள் பற்றி விவரங்கள் தெரியாமலும் வாதிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(4) கிணற்றில் தண்ணீர் எடுப்பது, வழி விடாமலும் பிரச்சனை செய்தார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பெருமாளை அழைக்கலிக்க வேண்டும் என்று வாதிகள் தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தும் பொன்னுசாமி உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார், எப்போது இறந்தார் என்றால் சுமார் 10 ஆண்டுகளுக்கு கழித்து இறந்தார்.

**<u>குறுக்கு விசாரணை முடிவுற்றது.</u>**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND

District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai